"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 4

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________

**வினாத்தாளில் விடை எழுதுக.**

**பகுதி - 1**

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்
(கலிலியோ, தோமஸ்அல்வாஎடிசன், மார்க்கோனி)

2. வல்லினமெய் எழுத்துகளின் எண்ணிக்கை
(ஐந்து, ஏழு, ஆறு)

3. குயில் கூவும் அதுபோல மயில்
(அலறும், அகவும், கத்தும்)

4. எல்லாச் செல்வங்களையும் விட உயர்ந்த செல்வம்
(பொருள், வீடு, கல்வி)

5. குருவிகள் வானத்தில் பறந்தன. இதில் பறந்தன என்பது
(முன்னிலை, படர்க்கை, தன்மை)

6. 44 ஆண்டுகள் ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னன்
(பண்டாரவன்னியன், எல்லாளன், சங்கிலியன்)

7. பொருளின் பெயரைக் குறிக்கும் சொல்
(வினைச்சொல், பெயர்ச்சொல், இடைச்சொல்)

8. பேரனுக்கு பேர்த்தி போல உழவனுக்கு
(உழத்தி, உழவி, உழத்தினி)

9. 'கூரிருள் அகன்றது கூவின கோழி...' என்ற பாடலைப் பாடியவர்
(சோமசுந்தரப்புலவர், பாரதியார், உருத்திரமூர்த்தி)

10. அகச்சுட்டுச் சொல்லாக அமைவது
(அந்தவீடு, இவன், இந்தச்சிறுவன்)

11. கதிரவனைக்கண்டு உயிரினங்கள்
(மகிழும், மகிழ்வார்கள், மகிழ்ந்தது)

12. இயல், இசை, நாடகம் என்பன
(முப்பால், முத்தமிழ், முப்பொருள்)

(12×1=12 புள்ளிகள்)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. அன்னை ______________________
2. எழில் ______________________
3. ஒலி ______________________
4. கழனி ______________________
5. உண்மை ______________________
6. தீ ______________________

(6×1=6 புள்ளிகள்)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. இன்பம் ______________________
2. அமைதி ______________________
3. பிறப்பு ______________________
4. வெற்றி ______________________
5. பெரியோர் ______________________
6. நினைவு ______________________

(6×1=6 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக.**

1. தமிழ் + இசை = ______________________
2. போர் + கருவி = ______________________
3. சுடர் + ஒளி = ______________________
4. தொழில் + சாலை = ______________________
5. பண்டு + தமிழ் = ______________________
6. கிழக்கு + திசை = ______________________

(6×1=6 புள்ளிகள்)

**5. பிரித்தெழுதுக.**

1. கல்லறை = ________ + ________
2. நூலகம் = ________ + ________
3. தாய்மொழி = ________ + ________
4. கடற்கரை = ________ + ________
5. விண்ணுலகம் = ________ + ________
6. சர்க்கரைப்பொங்கல் = ________ + ________

(6×1=6 புள்ளிகள்)

**6. தரப்பட்ட சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| வையகமும் | உணவு | வானகமும் |
| சிறிது | செய்த | வயிற்றுக்கும் |

1. செவிக்கு ________ இல்லாதபோழ்து ________

________ ஈயப் படும்.

2. செய்யாமல் ________ உதவிக்கு ________

________ ஆற்றல் அரிது. (6×1=6 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் சொற்களை வைத்துக் கருத்தமைய வாக்கியம் எழுதுக.**

1. கிராமம்: ________

________

2. ஓய்வுநேரம்: ________

________

3. முதுமொழி: ________

________

4. அரங்கேற்றம்: ________

________



(4×1=4 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் வாக்கியங்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தெரிந்து எழுதுக.**

1. குருவி கூடு கட்டியது.
2. தண்ணீரை நான் குடித்தேன்.
3. கொக்கு உயரப் பறந்தது.
4. கோவிலுக்கு அம்மா சென்றார்.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(12×½=6 புள்ளிகள்)

**9. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மூதுரையை இயற்றியவர் யார்?

______________________________

2. கல்வியை எப்போது கற்கவேண்டும்?

______________________________

3. தமிழ்மொழி பேசப்படும் நாடுகள் இரண்டினைத் தருக.

______________________________

4. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

______________________________

5. உமக்குத் தெரிந்த பழமொழிகள் இரண்டினைத் தருக.

______________________________

______________________________



(5×1=5புள்ளிகள்)

**10. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. கல்வியின் சிறப்பு
2. தமிழ்மொழி
3. எல்லாளமன்னன்

(8 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கட்டங்களை நிறைவு செய்க.**

மலரைக் குறிப்பது

மரங்கள் நிறைந்த இடம்

விலங்குகளுள் ஒன்று

செங்கதிரோன் உதயமாகும் திசை

ஈழத்தில் தேயிலை பயிரிடப்படும் பகுதி



(5×1=5 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| மகிழ்ந்தாள் | வியந்தாள் | காணப்பெற்றன |
| இசைத்தனர் | விரும்பினாள் | சென்றாள் |

1. யாழினி நேற்று இசை அரங்கேற்றம் பார்க்கச் ________________________.
2. மண்டபத்திலிருந்த அவையோரைப் பார்த்து ________________________.
3. மேடையில் பலவகையான இசைக்கருவிகள் ________________________.
4. அவ் இசைக்கருவிகளை இசைக்கலைஞர்கள் ________________________.
5. அதனைக் கேட்டு மிகவும் ________________________.
6. யாழினி இசை பயில ________________________.

(6×1=6 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



பலாமரம் நிழலைத் தருகிறது. பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் உறைவிடமாக அமைகின்றது. காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது. பலாமரத்தின் வேர்கள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுகின்றன. இதன் இலைகள் ஆடு, மாடுகளுக்கு உணவாகின்றன. பலாமரத்தில் இருந்து கிடைக்கும் பழங்கள், காய்கள், விதைகள் என்பவற்றை நாம் உணவாக உண்ணலாம்.

1. நிழலைத் தருவது எது?

   ______________________________________________

2. பலாமரம் எவற்றிற்கு உறைவிடமாகின்றது?

   ______________________________________________

3. இதன் இலைகள் எவற்றிற்கு உணவாகின்றன?

   ______________________________________________

4. நாம் எவற்றை உணவாக உண்ணலாம்?

   ______________________________________________

(4×1=4 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |